1990 மே 9]

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை தனியார் அலுவல்கள் முடிந்த பிறகு, அரசு அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை (10—5—1990) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

94. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12—1—1990 ஆம் நாளிட்ட 78ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

95. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கை, ஏனைய தாள்கள்:

எதுவுமில்லை.